**Judicial Form No.53**

**(See Rule 43)**

**DEPOSITION OF WITNESS**

**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.**

**C.C. No. 741/2024**

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | ஐ.டி.-ல் வேலை |
| பெயர். | - | லோகேஷ்வரன் | வட்டம் | - | பாண்டிச்சேரி |
| த/பெ. | | சாமிக்கண்ணு | சமயம் | - | |
| கிராமம் | - | திருக்கனூர் | வயது | - | 26 |

12.11.2025

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது திருக்கனூரில் வசித்து திரைப்படத்துறையில் Visual Effect பிரிவில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அக்கா. அ.சா.2 எனது தந்தை. எதிரிகளை தெரியும். 1 வது எதிரி எனது அக்காவின் கணவர். கடந்த 17.05.2021 ந் தேதி அ.சா.1-ற்கும், 1 வது எதிரிக்கும் இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் செய்து வைத்தோம். திருமணத்தின் போது அசா1-ற்கு 25 பவுன் நகையும், 1வது எதிரிக்கு 5 பவுன் நகையும், சுமார் 2 லட்சம் வீட்டிற்கு தேவையான பொருட்களும், ரூ.2 லட்சம் வண்டி வாங்குவதற்காக பணமும் கொடுத்து திருமணம் செய்துவைத்தோம்.

2. திருமணம் முடிந்து எனது அக்கா 1வது எதிரியுடன் குடும்பத்துடன் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தார். 1வது எதிரிக்கும், எனது அக்காவிற்கும் அவ்வப்போது சண்டை ஏற்படும். 1வது எதிரியின் அக்கா பாரதி அதே ஊரில் வசித்து வருகிறார். அவர் அடிக்கடி எனது அக்காவிடம் வந்து எனது தம்பிக்கு அதிக அளவில் நகை போட்டு திருமணம் செய்வதாக இருந்தோம், அதனால் உனது பெற்றோரிடம் மேற்கொண்டு நகை வாங்கி வா என்று கூறினார்.

3. இது சம்மந்தமாக எனது அக்கா என்னிடமும், எனது பெற்றோரிடமும் தெரிவித்தார். நாங்கள் எங்க அக்காவை சமாதானம் செய்து குடும்பம் நடத்துமாறு தெரிவித்தோம். அதன் பிறகு எனது அக்கா கர்ப்பமானார். அந்த விஷயத்தை எனது அக்கா தொலைபேசி மூலம் என்னிடமும், அவரது கணவரிடமும் தெரிவித்தார். அவரது கணவர் ஊரிலிருந்து வந்து மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் போது நகை சம்மந்தமாக மீண்டும் அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது.அதனால் எங்க அக்காவிற்கு கரு கலைந்துவிட்டது. பின்பு நானும்,எனது பெற்றோரும் எனது அக்காவை வீட்டிற்கு அழைத்து வந்து சுமார் 10 நாட்கள் வைத்திருந்து மீண்டும் எதிரிகள் வீட்டிற்கு குடும்பம் செய்வதற்காக அனுப்பி வைத்தோம்.

4. அதன் பிறகு 2023ம் வருடம் 11வது மாதத்தில் எதிரிகள் எனது அக்காவிடம் மேற்கொண்டு நகையை கேட்டு, அவரை அடித்து வீட்டிலிருந்து வெளியே துரத்திவிட்டார்கள். எனது அக்கா என்னிடம் தொலைபேசியில் தகவல் தெரிவித்தார். நான் உடனே திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தேன். திருவெண்ணெய்நல்லூர் காவலர்கள் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்குமாறு கூறினார்கள்.

5. நான் எனது அக்காவை எதிரிகள் வீட்டு அருகிலிருந்து அழைத்துச்சென்று விழுப்புரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிரிகள் மீது எங்க அக்கா புகார் கொடுத்தார். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**Judicial Form No.53**

**(See Rule 43)**

**DEPOSITION OF WITNESS**

**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.**

C.C. No. 741/2024

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | வீட்டுக்குடித்தனம் |
| பெயர். | - | அமுதா | வட்டம் | - | பாண்டிச்சேரி |
| க/பெ. | | சாமிக்கண்ணு | சமயம் | - | |
| கிராமம் | - | திருக்கனூர் | வயது | - | 50 |

12.11.2025

1முதல் 4 எதிரிகள் ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது திருக்கனூரில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகள். அ.சா.2 எனது கணவர். அ.சா.3 எனது மகன். எதிரிகளை தெரியும். 1வது எதிரி எனது மருமகன். கடந்த 2021ம் வருடம் அ.சா.1-ற்கும், 1வது எதிரிக்கும் இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் செய்து வைத்தோம். திருமணத்தின் போது அசா1-ற்கு 25 பவுன் நகையும், 1வது எதிரிக்கு 5 பவுன் நகையும், சுமார் 4 லட்சம் அளவிற்கு வீட்டிற்கு தேவையான பொருட்களும், ரூ.2 லட்சம் வண்டி வாங்குவதற்காக பணமும் கொடுத்து திருமணம் செய்துவைத்தோம்.

2. திருமணம் முடிந்து எனது மகள் 1வது எதிரியுடன் குடும்பத்துடன் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தார். சுமார் 4-5 மாதங்கள் கழித்து 1வது எதிரியின் அக்கா பாரதி மற்றும் அவரின் கணவர் ராஜேஷ் ஆகியோர்கள் எனது மகளை சந்தித்து 1வது எதிரிக்கு வேறொரு இடத்தில் திருமணம் செய்து கொடுத்தால் அதிக அளவில் நகை செய்திருப்பார்கள் என்றும், அதனால் எனது மகளை மேற்கொண்டு நகை வாங்கி வா என்று கூறியிருந்தார்கள். அதனால் எனது மகளுக்கும், அவரது மாமியாருக்கும் இது சம்மந்தமாக சண்டை ஏற்பட்டது.

எனது மகள் என்னிடம் தொலைபேசியில் தகவல் சொன்னார். நான் அவரிடம் அனுசரித்து போகுமாறு கூறினேன்.

3. அதன் பிறகு 4-5 மாதம் கழித்து எனது மகள் மாசமாக இருப்பதாக எங்களுக்கு தகவல் தெரிவித்தார். பின்பு 1வது எதிரி ஊரிலிருந்து வந்து மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் போது நகை சம்மந்தமாக அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது. அதனால் எனது மகளுக்கு கரு கலைந்துவிட்டது. நான் எனது மகளை சுமார் 10-20 நாட்கள் எனது வீட்டில் வைத்து மீண்டும் எதிரிகள் வீட்டிற்கு அனுப்பிவைத்தேன். பின்பு சிறிது காலம் கழித்து 1வது எதிரியின் அக்கா நிலம் வாங்க போவதாகவும், அதற்கு பணம் வேண்டும் என்று எனதுமகளை மேற்கொண்டு நகைகளை வாங்கி வா என கொடுமை படுத்தினார்கள். அதை எனது மகள் தொலைபேசி மூலம் தெரிவித்தார். நான் எனது மகளை குடும்பம் என்றால் அப்படி தான் இருக்கும் அனுசரித்து போ என்று கூறினேன்.

4. பின்பு 2023ம் வருடம் ஒரு நாள் இரவு 08.00 மணியளவில் எனது மகள் எனக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு எதிரிகள் வீட்டிலிருந்து வெளியே துரத்திவிட்டதாகவும், துணிமணிகளை வெளியே போட்டு கதவை சாத்திவிட்டதாகவும் எனக்கு தகவல் தெரிவித்தார். நான் எனது மகளிடம் 1வது எதிரிக்கு தகவல் தெரிவிக்குமாறு கூறினேன். எனது மகள் 1வது எதிரியிடம் தகவல் தெரிவித்தார். அதற்கு 1வது எதிரி மற்ற எதிரிகள் சொல்வதை கேட்டு நடந்துக்கொள் என எனது மகளிடம் கூறினார்.

5.பின்புஎனது மகள் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார். அங்கு வந்த போலீசார் வீடு பூட்டியிருப்பதாகவும், நீங்கள் விழுப்புரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்குமாறு கூறினார்கள். எனது மகள் அந்த ஊரில் உள்ள கோவில் அருகே நின்றிருந்த போது எனது மகனை அனுப்பி அ.சா.1 -ஐ புகார் கொடுத்த பிறகு எனது வீட்டிற்கு அழைத்து வந்தார். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.